Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

R S Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari 9444 288784
Dr Sathish Rajkumar 9445 401793
Dr Shanthi R 9884 650945
Dr Salina R 87780 87742
Dr Praveena E 9944 100443

மலர் 3 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன், செப்டம்பர் 23, 2026 இதழ் 163

## கூவம் ஆறு மறுசீரமைப்பு: விரிவான திட்ட அறிக்கை குறித்து முதலமைச்சர் விஜய் ஆய்வு!



சென்னை, 23 செப்டம்பர் 2026: தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் அவர்கள் தலைமையில் இன்று தலைமைச் செயலகத்தில், கூவம் ஆறு மறுசீரமைப்புத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வது குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு, 2026 - 2027 நிதிநிலை அறிக்கையில், சென்னை நதிகள் மறுசீரமைப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, கூவம் ஆறு மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டது. அதனடிப்படையில், இன்று நடைபெற்ற இக்கூட்டத்தில் முதலமைச்சர் விஜய், கூவம் ஆற்றை அதன் இயற்கையான நிலைக்கு மீட்டெடுக்கவும், நிலையான சுற்றுச்சூழல் சீரமைப்பை உறுதி செய்யவும், விரிவான திட்ட அறிக்கையைத் (டிபிஆர்) தயாரிக்கும் பணிகளின் முன்னேற்றம் மற்றும் இத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள பல்வேறு வசதிகள், அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும், பன்னாட்டு தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் தரநிலைகளை உறுதி செய்யும் வகையில் இதற்கான உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கான பணிகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இதன் தொடக்க நடவடிக்கையாக, கூவம் ஆற்றின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான கருத்துருவாக்கம் (கான்செப்ட் ப்ளான்) மற்றும் செயல் விளக்கத் திட்டம் மேற்கொள்ள, முதற்கட்டமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட 3 கி.மீ நீளமுள்ள பகுதிகளில், நடைபாதை மற்றும் மிதிவண்டிப் பாதைகள், நதிக்கரை நடைபாதைகள், பார்வையிடும் தளங்கள், பசுமைப் பகுதிகள், சமூகப் பயன்பாட்டு வசதிகள், இயற்கை சார்ந்த சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஆய்வு செய்யப்பட்டது.

சென்னை மாநகரின் நதிச்சூழலை மேம்படுத்தி, பொதுமக்களுக்கு சிறந்த பொது வெளிகளையும், வசதிகளையும் உருவாக்கும் நோக்கில், கூவம் ஆறு மறுசீரமைப்பு பல்வேறு கட்டங்களாக ஒருங்கிணைந்த மற்றும் நிலையான அணுகுமுறையுடன் முன்னெடுத்துச்செல்ல மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய் குமார், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மு.அ. சித்திக், இ.ஆ.ப., நீர்வளத்துறை செயலாளர் திரு. பிரசாந்த் மு. வடநெரே, இ.ஆ.ப., சென்னை நதிகள் புனரமைப்பு நிறுவனத்தின் உறுப்பினர் செயலர் திரு. சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முக்கிய திருப்புமுனையில் நீலகிரி: "முதலமைச்சரின் நீலகிரி மறுசீரமைப்பு இயக்கம் - 2035" அமைக்க குடிமக்கள் கோரிக்கை

சென்னை, 23 செப்டம்பர் 2026: நீலகிரியின் சூழலியல் மறுசீரமைப்பு, நீர்வளப் பாதுகாப்பு, நிலப் பயன்பாட்டு திட்டமிடல், பேரிடர் தாங்குதிறன் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றை ஒரே ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் கொண்டு வர "முதலமைச்சரின் நீலகிரி மறுசீரமைப்பு இயக்கம் - 2035" என்ற நீண்டகால திட்டத்தை தமிழக அரசு உருவாக்க வேண்டும் என்று ஹொரஷோலையன்ஸ் நல அறக்கட்டளை கோரிக்கை விடுத்துள்ளது.

நீலகிரி ஒரு சுற்றுலாத் தளம் மட்டுமல்ல. சோலைக் காடுகள், புல்வெளிகள், ஓடைகள், ஈரநிலங்கள், நீர்ப்பிடிப்பு பகுதிகள், விவசாய நிலங்கள், வனவிலங்கு வாழிடங்கள் மற்றும் மலைநகரங்கள் ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்த நுண்ணிய மலைச் சூழலியல் அமைப்பாகும். இந்த அமைப்பில் ஏற்படும் பாதிப்புகள் நீர்பாதுகாப்பு, வாழ்வாதாரம், சுற்றுலா, உயிரியல் பல்வகைமை, விவசாயம் மற்றும் பேரிடர் அபாயம் ஆகியவற்றை பாதிக்கக்கூடும்.

அறக்கட்டளையின் மனுவில், தென்னிந்தியாவின் முக்கிய நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒன்றாக நீலகிரி குறிப்பிடப்பட்டுள்ளது. காவிரி ஆற்றில் பாயும் நீரில் சுமார் ஆறில் ஒரு பங்கு நீலகிரியிலிருந்து உருவாகிறது என்றும், மழைநீரை சேமித்து படிப்படியாக வெளியிடுவதில் சோலைக் காடுகள் மற்றும் புல்வெளிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும் மனு குறிப்பிடுகிறது.

அறக்கட்டளை மேற்கோள் காட்டிய தமிழக அரசுத் தரவுகளின்படி, "மாடரேட் ஃபாரஸ்ட்" என வகைப்படுத்தப்பட்ட பரப்பு 2013-ல் 657.1 சதுர கி.மீ. இருந்தது; 2023-ல் அது 600.3 சதுர கி.மீ. ஆக மாறியுள்ளது - அந்த குறிப்பிட்ட வகைப்பாட்டில் 8.64% குறைவு. இதே காலத்தில் Bare/Sparse Vegetation 86.2 சதுர கி.மீ. இலிருந்து 102.4 சதுர கி.மீ. ஆக (+18.79%) உயர்ந்துள்ளது; பில்ட்-அப் லேண்ட் 31.3 சதுர கி.மீ. இலிருந்து 33.1 சதுர கி.மீ. ஆக (+5.75%) உயர்ந்துள்ளது.

முக்கியமாக, இந்த 8.64% எண்ணிக்கை நீலகிரியின் மொத்த வனப்பரப்பு 8.64% குறைந்தது என்று பொருளல்ல. இது அதிகாரப்பூர்வ "மாடரேட் ஃபாரஸ்ட்" வகைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தை மட்டும் குறிக்கிறது. அதே தரவுகளில் ஓப்பன் ஃபாரஸ்ட் மற்றும் வெரி டென்ஸ் ஃபாரஸ்ட் வகைப்பாடுகளில் சிறிய உயர்வுகளும் பதிவாகியுள்ளன.

தமிழக அரசின் பேரிடர் மேலாண்மை தகவல்களின் அடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் 284 இடங்கள் இயற்கைப் பேரிடர் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 68 இடங்கள் "மோஸ்ட் அஃபெக்டேட்" என்றும் 89 இடங்கள் "மோர் அஃபெக்டேட்" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தீவிர மழை, திடீர் வெள்ளம், மண் அரிப்பு, நிலச்சரிவு அபாயம், நீர்நிலைகள் மீதான அழுத்தம் மற்றும் திட்டமிடப்படாத நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் ஆகியவற்றை தனித்தனியான பிரச்சினைகளாக இனி அணுக முடியாது என்பதே அறக்கட்டளையின் வலியுறுத்தல்.

## காமராஜர் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார் முதலமைச்சர் விஜய்!



சென்னை 23, செப்டம்பர் 2026: 6-8ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கான பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தினை முதல்வர் விஜய் சென்னையில் இன்று தொடங்கி வைத்தார். காலை உணவுத் திட்டத்தை தொடக்கி வைத்து மாணவர்களுக்கு உணவு பரிமாறி, மாணவர்களுடன் அமர்ந்து முதல்வர் விஜய் உணவு அருந்தினார்.

6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தை இன்று முதல்வர் விஜய் திருவான்மியூரில் தொடங்கி வைத்தார். கடந்த திமுக ஆட்சியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு முதல்வரின் காலை உணவுத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

தற்போதுள்ள தவெக அரசு இந்த திட்டத்தின் பெயரை பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் மாற்றம் செய்து, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கும் வழங்கும் வகையில் விரிவாக்கம் செய்யப்படும் என அறிவித்திருந்தது. மேலும், இந்த திட்டம் செப்.22ம் தேதி (நேற்று) முதல் தமிழ்நாடு முழுவதும் தொடங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இதனை முதல்வர் விஜய் நேற்று காலை சென்னை, திருவான்மியூரில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் தொடங்கி வைத்தார். இத்திட்ட விரிவாக்கத்தின் மூலம், 15,454 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் சுமார் 15.30 லட்சம் மாணவ, மாணவியர்கள், கூடுதலாகப் பயன் பெறுவர்.

இதற்கென நடப்பு நிதியாண்டில் கூடுதலாக 217 கோடியே 63 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒட்டுமொத்தமாக 724 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## டிரம்ப் நிர்வாகத்துடன் மோதல் எதிரொலி; பிரபல ஊடகங்கள் புறக்கணிப்பால் சொந்த 'டிவி' சேனல் தொடங்கிய அதிபர் மாளிகை: அமெரிக்க வரலாற்றில் முதல்முறையாக ஒளிபரப்பு




சென்னை 23, செப்டம்பர் 2026: அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகத்திற்கும் முன்னணி செய்தி ஊடகங்களுக்கும் இடையே வெடித்துள்ள மோதல் தற்போது புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

அமெரிக்காவில் அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான நிர்வாகம், செய்தியாளர்களின் செய்தி சேகரிப்பு உரிமையில் பல்வேறு புதிய கட்டுப்பாடுகளை விதித்து வந்தது. குறிப்பாக 'சிஎன்என்', 'எம்எஸ்நவ்' மற்றும் 'பொலிடிகோ' ஆகிய முன்னணி செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த நிருபர்களுக்கு வெள்ளை மாளிகைக்குள் நுழைய திடீர் தடை விதிக்கப்பட்டது. அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பாதிக்கப்பட்ட 3 ஊடகங்களும் அமெரிக்க கூட்டாட்சி நீதிமன்றத்தில் முதல் சட்ட திருத்த உரிமையின் கீழ் வழக்கு தொடர்ந்தன.

இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் 'ஏபிசி', 'சிபிஎஸ்', 'சிஎன்என்', 'பாக்ஸ் நியூஸ்' மற்றும் 'என்பிசி' ஆகிய 5 முன்னணி தொலைக் காட்சி நிறுவனங்கள், இந்த அதிபரின் அதிகாரப்பூர்வ நிகழ்வுகளை ஒருங்கிணைந்து படம் பிடிக்கும் தங்களது கூட்டு ஒளிபரப்பு சேவையை அதிரடியாக புறக்கணித்தன. ஊடகங்களின் இந்த கூட்டுப் புறக்கணிப்பை முறியடிக்கும் வகையில், வெள்ளை மாளிகை நிர்வாகம் சொந்தமாக 24 மணி நேரமும் செயல்படும் பிரத்யேக டிஜிட்டல் தொலைக் காட்சி தளத்தை அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ளது. 'டிரம்ப் டிவி: தி எசென்ஷியல்ஸ் ஸ்டேஷன்' என்ற பெயரிலான இந்த புதிய நேரலை தளம் நேற்று முதல் பயன்பாட்டுக்கு வந்தது. வெள்ளை மாளிகையின் அதிகாரப்பூர்வ இணையதளம் மற்றும் 'யூடியூப்' பக்கத்தில் இந்த ஒளிபரப்பு தொடங்கப்பட்டுள்ளது.

இதில் அதிபர் டிரம்பின் முக்கிய அறிவிப்புகள், செய்தியாளர் சந்திப்புகள், ஆவணப் பதிவுகள் மற்றும் பழைய சிறப்பு மிக்க உரைகள் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. இதன் தொடக்க நிகழ்வாக மவுண்ட் ரஷ்மோர் பகுதியில் அவர் ஆற்றிய உரை ஒளிபரப்பப்பட்டது. ஊடகங்களை முற்றிலும் தவிர்த்துவிட்டு, மக்களுடன் நேரடியாக தொடர்புகொள்ளும் நோக்கில் அதிபர் நிர்வாகம் எடுத்துள்ள இந்த முடிவு உலக அளவில் பெரும் விவாதத்தை கிளப்பியுள்ளது.

## இந்தியாவில் வீடு வாங்கும் வயது குறைகிறது: ஜென் சி வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 86% அதிகரித்துள்ளது - கோட்டக் அறிக்கை

சென்னை 23, செப்டம்பர் 2026: இந்தியர்கள் தங்களது முதல் வீட்டை வாங்கும் வயது குறைந்து வருவதாகவும், வீட்டுக் கடன் சந்தையில் ஜென் சி மிக வேகமாக வளர்ந்து வரும் பிரிவாக உருவெடுத்துள்ளதாகவும் கோட்டக் மஹிந்திரா பேங்க்-இன் தரவுகள் தெரிவிக்கின்றன.

வங்கியின் தரவுகளின்படி, 25 முதல் 30 வயதுக்குட்பட்ட வீட்டுக் கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை எஃப்ஒய்24 மற்றும் எஃப்ஒய்26-க்கு இடையில் 86% அதிகரித்து, 1,234-லிருந்து 2,290 ஆக உயர்ந்துள்ளது. கோட்டக்-இன் தனிநபர் வீட்டுக் கடன் வாடிக்கையாளர்களில் ஜென் சி-இன் பங்கு இரண்டு ஆண்டுகளில் 6%-லிருந்து 9% ஆக அதிகரித்துள்ளது. இது அவர்களின் பங்களிப்பில் 50% உயர்வாகும். இதன் மூலம், வங்கியின் வீட்டுக் கடன் கணக்கில் மிக வேகமாக வளர்ந்து வரும் இளம் பிரிவினராக இவர்கள் மாறியுள்ளனர். இதற்கு மாறாக, இதே கால கட்டத்தில் 30-45 வயதுடைய வீட்டுக் கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை 26% மட்டுமே அதிகரித்துள்ளது. இந்த போக்கு, இளம் இந்தியர்கள் சொந்த வீடு வாங்குவதை அணுகும் விதத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை சுட்டிக் காட்டுகிறது. முந்தைய தலைமுறையினர் தங்கள் வாழ்க்கையின் பிற்பகுதியில் அடைய நினைத்த ஒரு இலக்கு, தற்போது மிக விரைவாகவே எட்டப்படுகிறது.

பல ஆண்டுகளாக, ஜென் சி தலைமுறையினர் நீண்ட காலம் வாடகை வீடுகளில் இருப்பார்கள், பெரிய அளவிலான நிதிப் பொறுப்புகளைத் தள்ளிப்போடுவார்கள் மற்றும் நெகிழ்வுத் தன்மைக்கு முன்னுரிமை அளிப்பார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், வீட்டைப் பொறுத்த வரை, பல இளம் இந்தியர்கள் எதிர்பார்த்ததை விட முன்னதாகவே நீண்ட கால முடிவுகளை எடுக்கிறார்கள் என்பதை இந்தத் தரவுகள் காட்டுகின்றன.

"இந்தியக் குடும்பங்களில் சொந்த வீடு என்பது தொடர்ந்து ஒரு சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது," என்று கோட்டக் மஹிந்திரா பேங்க்-இன் ஹோம் லோன்ஸ் தலைவரான நகுல் சக்சேனா தெரிவித்தார். "மாறியிருப்பது என்னவென்றால், மக்கள் அந்த முடிவை எடுக்கும் வயதுதான். முன்பை விட அதிக தெளிவு மற்றும் நம்பிக்கையுடன் இளம் வாடிக்கையாளர்கள் சந்தைக்குள் நுழைவதை நாங்கள் பார்க்கிறோம்."

பல குடும்பங்களில், பெற்றோர்கள் வீடு வாங்குவதற்காக இன்னும் சேமித்துக் கொண்டிருந்த வயதிலேயே, இளம் பணியாளர்கள் வீடுகளை வாங்குகிறார்கள். சில சமயங்களில், பிள்ளைகள் தங்களின் சொந்த வருமானத்தின் மூலம் பெற்றோரின் சொந்த வீடு வாங்கும் ஆசையை நிறைவேற்ற உதவுகிறார்கள். மற்ற சிலவற்றில், இருவர் சம்பாதிக்கும் குடும்பங்களில், முந்தைய தலைமுறையினர் பல ஆண்டுகளாகத் தள்ளிப் போட்ட முடிவுகளை மிக விரைவாகவே எடுக்கிறார்கள். இளம் வாங்குபவர்கள் வீடுகள் வாங்கும் சந்தையில் நுழையும் விதத்தையும் இந்த மாற்றம் மாற்றியமைக்கிறது. ஒரு பெரிய 'நிரந்தர வீட்டை' வாங்கக் காத்திருப்பதற்குப் பதிலாக, பலரும் தங்களின் தற்போதைய பட்ஜெட் மற்றும் வாழ்க்கையின் தற்போதைய கட்டத்திற்குப் பொருந்தக்கூடிய வீடுகளை வாங்குகிறார்கள். இந்த முதல் வீட்டை தங்களின் எதிர்கால நிதி வளர்ச்சிக்கான ஒரு படிக்கட்டாகவே அவர்கள் கருதுகின்றனர்.

## சர்வதேச நெட்ஃபிளிக்ஸ் திரைப்படமான 'பெஸ்ட் ஆஃப் தி பெஸ்ட்'-ல் இடம் பெறும் சந்தோஷ் நாராயணனின் 'என்ஜாய் என்ஜாமி' மற்றும் 'மாமதுர'!

சென்னை 23, செப்டம்பர் 2026: தமிழ் இசையை உலக அரங்கிற்கு தொடர்ந்து எடுத்துச் செல்லும் இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின் இசைப் பயணத்தில் மேலும் ஒரு பெருமையான தருணம் இணைந்துள்ளது.

சந்தோஷ் நாராயணன் இசையமைத்த 'என்ஜாய் என்ஜாமி' மற்றும் 'மாமதுர' ஆகிய பாடல்கள், தற்போது வெளியாகியுள்ள சர்வதேச நெட்ஃப்ளிக்ஸ் திரைப்படமான 'பெஸ்ட் ஆஃப் தி பெஸ்ட்'-ல் இடம்பெற்றுள்ளன.

உலகளாவிய ரசிகர்களை சென்றடையும் வகையில் வெளியாகியுள்ள இந்த சர்வதேச திரைப்படத்தில் தமிழ் பாடல்கள் இடம் பெற்றிருப்பது, தமிழ் இசையின் தனித்துவத்தையும் அதன் உலகளாவிய பயணத்தையும் மீண்டும் வெளிப்படுத்தும் முக்கியமான தருணமாக அமைந்துள்ளது.






குறிப்பாக, 'என்ஜாய் என்ஜாமி' பாடல் தமிழ் நாட்டுப்புற இசையின் வேர்களையும் நவீன இசை அணுகுமுறையையும் இணைத்து உலகளவில் பெரும் கவனத்தை பெற்ற நிலையில், தற்போது அது சர்வதேச நெட்ஃப்ளிக்ஸ் திரைப்படத்தின் வாயிலாக மேலும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ரசிகர்களை சென்றடைந்துள்ளது.

அதேபோல், 'மாமதுர' பாடலும் இந்த சர்வதேச திரைப்படத்தில் இடம்பெற்றிருப்பது, சந்தோஷ் நாராயணனின் இசையின் தனித்துவத்திற்கும், தமிழ் இசையின் எல்லையற்ற பயணத்திற்கும் மற்றுமொரு சிறப்பான அடையாளமாக அமைந்துள்ளது.

தமிழ் மண்ணின் இசை உணர்வுகளையும், நவீன இசை வடிவங்களையும் தனது தனித்துவமான பாணியில் இணைத்து வரும் சந்தோஷ் நாராயணனின் இரண்டு பாடல்கள் சர்வதேச நெட்ஃப்ளிக்ஸ் திரைப்படத்தில் இடம்பெற்றிருப்பது, அவரது இசைப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு மைல்கல்லாக அமைந்துள்ளது.

## இடுப்புக்குழி ஆரோக்கியம் சார்ந்த தயக்கங்களை உடைக்கும் அதிநவீன சிகிச்சைகள்: மருத்துவ நிபுணர்கள் விளக்கம்



சென்னை 23, செப்டம்பர் 2026: சிறுநீர்ப்பை, குடல், இடுப்பு தசைநார்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நரம்புகளைப் பாதிக்கும் இடுப்புக்குழி கோளாறுகள் மக்கள் எதிர்கொள்ளும் பொதுவான மருத்துவப் பிரச்சனைகளாகும். இதனால் சிறுநீர் கசிவு, அதிதீவிரமாக செயல்படும் சிறுநீர்ப்பை அல்லது மலக்குடல் இயக்கத்தை கட்டுப்படுத்துவதில் சிரமம் போன்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்தியாவில் சிறுநீர் அடங்காமை பிரச்சனை அனைத்து வயது பிரிவுகளிலுள்ள பொதுமக்களிடையே 8% முதல் 45% வரையிலும், முதியோர்களிடையே 77% வரையிலும் காணப்படுவதாகப் பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன 1. நாடு முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் இப்பிரச்சனைகளுக்கு தகுந்த மருத்துவ தீர்வுகள் இருக்கின்ற போதிலும், அவை குறித்த விழிப்புணர்வு இல்லாமலும், தங்களது உடல் அறிகுறிகளை வெளியில் சொல்லத் தயங்கியும், மௌனம் காத்து சிரமப்படுகின்றனர். இந்தத் தயக்கங்களையும் சமூகத் தடைகளையும் உடைத்து, நம்பிக்கை இல்லாத நோயாளிகளுக்குப் புதிய வாழ்க்கையை அளிக்கும் அதிநவீன சிகிச்சைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மருத்துவ நிபுணர்கள் தற்போது சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றனர்.

அப்போலோ மருத்துவமனையின் சிறுநீர் பாதையியல் - மகளிர் நோயியல் மற்றும் ரோபோடிக் அறுவைசிகிச்சை நிபுணரான டாக்டர் மீரா வி.வி. ராகவன் பேசுகையில், சிறுநீர்ப்பையை முழுமையாகக் காலி செய்ய முடியாமல் கடும் அவதிப்பட்ட 20 வயதான நீரு கங்குலி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற மாணவியின் மருத்துவக் குறிப்பைப் பகிர்ந்து கொண்டார். ஒன்றரை ஆண்டுகளாக, சிறுநீர்ப்பை தசைகளை தளர்த்தும் மருந்துகள் மற்றும் சிறுநீரை வெளியேற்ற மெல்லிய குழாய்களைப் பயன்படுத்துவது போன்ற வழக்கமான மருத்துவ சிகிச்சைகளை அந்த மாணவி மேற்கொண்டார். ஆனால் அந்த முயற்சிகள் எதுவும் அவருக்குப் பலனளிக்கவில்லை.

அந்த இளம் பெண்ணுக்கு நரம்பியல் காரணமற்ற சிறுநீர்ப்பை கோளாறு இருப்பது கண்டறியப்பட்டது. அதைத் தொடர்ந்து, மிகத் துல்லியமான அதிநவீன சிகிச்சை அவருக்குத் தேவைப்பட்டது.

அந்த இளம்பெண்ணின் பிரச்சனைக்குத் தீர்வுகாண, டாக்டர் மீரா 'சாக்ரல் நியூரோ மாடுலேஷன்' (எஸ்என்எம்) எனப்படும் அதிநவீன மருத்துவ செயல்முறையை எவ்வித அறுவை சிகிச்சையின்போது எந்த சிக்கல்களும் இன்றி வெற்றிகரமாக மேற்கொண்டார். இந்த எஸ்என்எம் சிகிச்சையானது இதயத் துடிப்பைச் சீராக்கும் பேஸ்மேக்கர் போன்றே செயல்படும்; ஆனால், இது இடுப்புப் பகுதிக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டதாகும். இச்சிகிச்சையில் ஒரு சிறிய பேட்டரி கருவி உடலினுள் பொருத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட பகுதிக்கு லேசான மின் சிக்னல்களைத் தொடர்ந்து அனுப்பும். இந்தச் சிக்னல்கள் அசாதாரண நரம்புச் செயல்பாடுகளைப் பாதுகாப்பாகச் சரிசெய்து, உடல் அதன் இயல்பான சிறுநீர்ப்பை மற்றும் குடல் செயல்பாட்டுத் திறனை திரும்பப் பெற உதவுகிறது.

சாக்ரல் நியூரோ மாடுலேஷன் சிகிச்சையின் ஒரு முக்கிய சிறப்பம்சம் என்னவென்றால், நிரந்தரமான கருவியைப் பொருத்துவதற்கு முன்பாக நோயாளிகளுக்கு 7 முதல் 10 நாட்கள் வரை ஒரு பரிசோதனை முயற்சி காலம் இருக்கும். இந்த மதிப்பீட்டின் போது, ஒரு தற்காலிக நியூரோஸ்டிமுலேட்டர் வெளிப்புறமாகப் பொருத்தப்பட்டு, நோயாளியின் உடல் அதற்கு எவ்வாறு ஒத்துழைக்கிறது என்பது ஏழு நாட்களுக்குக் கவனமாகக் கண்காணிக்கப்படும். இந்தப் பரிசோதனை வெற்றிகரமாக அமைந்தால் மட்டுமே இறுதியான அறுவை சிகிச்சை மூலம் கருவி பொருத்தப்படும் என்பதால், இது நோயாளிகளுக்கு மிகச் சிறந்த மற்றும் நம்பகமான சிகிச்சை முறையாக அமைகிறது.

ஒரு வாரம், ஒரு மாதம் மற்றும் மூன்று மாதங்கள் எனத் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டதில், அந்த மாணவி எவ்வித பக்க விளைவுகளுமின்றி நோயின் தீவிர பாதிப்பிலிருந்து கணிசமான நிவாரணம் பெற்றது உறுதி செய்யப்பட்டது. தனது வாழ்க்கைத் தரம் வியக்கத்தக்க அளவில் மேம்பட்டுள்ளதாகவும், இயல்பான அன்றாட நடவடிக்கைகளுக்கு எந்தச் சிரமமும் இல்லாமல் தான் திரும்பியிருப்பதாகவும் மிகுந்த திருப்தியுடனும், நம்பிக்கை கலந்த மகிழ்ச்சியுடனும் அந்த இளம் பெண் தெரிவித்தார்.

## அனைத்து பொறுப்புகளும் முதலமைச்சரிடமே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை: பீகார் மாநில ஆளுநர் சையத் அதா ஹஸ்னைன் பேச்சு

சென்னை 23, செப்டம்பர் 2026: பீகார் மாநிலத்தின் தலைநகரமான பாட்னாவில் உள்ள லோக் பவனில் தமிழ்நாடு நிருபர்களை சந்தித்த பீகார் மாநில ஆளுநர் சையத் அதா ஹஸ்னைன், தமிழ்நாடு - பீகார் மாநிலங்களுக்கு இடையேயான நட்புறவு சிறப்பாக நீடித்து வருகிறது. பல்கலைக்கழகங்களின் வேந்தர் பதவி ஆளுநரிடம் இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. அனைத்து பொறுப்புகளும் முதலமைச்சரிடமே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பல்கலைக் கழகங்களின் வேந்தர் பொறுப்பை ஆளுநரும் கவனிக்க தகுதியானவர் தான்.

முதலமைச்சரும், ஆளுநரும் இணைந்து பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளை கவனித்து வருகிறோம். பீகாரில் தற்போது சட்டம் - ஒழுங்கு நிலைமை சிறப்பாக உள்ளது. கடந்த காலங்களை ஒப்பிடுகையில் குற்றச் சம்பவங்கள் குறைந்துள்ளது. பீகாரில் ஏராளமான கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது. அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உலக வங்கி மற்றும் மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநிலத்தின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

விரைவில் வளர்ச்சியடைந்த நகரங்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. சாலை வசதி, விவசாயம், மகளிர் நலன் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கும் பீகார் அரசு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகிறது என்றார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil South Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## தூய்மை பணியாளர்களின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி!



சென்னை 23, செப்டம்பர் 2026: சென்னை எழும்பூர் பகுதியில் அமைந்துள்ள சென்னை சமூகப்பணி கல்லூரியின் முதுகலை சமூகப்பணி மாணவர்கள், தங்களது திட்ட களப்பணியின் ஒரு பகுதியாக, "துப்புரவுப் பணியாளர்களிடையே தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்" என்ற தலைப்பில் துப்புரவுப் பணியாளர்களின் தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பான ஆய்வை மேற்கொண்டனர்.

இத்திட்ட பணியின் ஒரு பகுதியாக, மாணவர்கள் சென்னை என்விரோ சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களைச் சந்தித்து, எழும்பூர், சவுகார்பேட்டை மற்றும் பழைய வண்ணாரப்பேட்டை பகுதிகளில், ஐந்தாம் மண்டலத்தில் கள ஆய்வு மேற்கொண்டனர். பணியாளர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, அவர்களின் அன்றாட பணிச் சூழல், தொழில் சார் சுகாதாரப் பிரச்சினைகள், பாதுகாப்பு வசதிகள் மற்றும் நலத் திட்டங்கள் தொடர்பான தகவல்களை மாணவர்கள் சேகரித்தனர்.

பணியாளர்களின் முக்கியப் பிரச்சினைகள் கண்டறிதல்

களப்பணியின் போது துப்புரவுப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் மாணவர்களால் அடையாளம் காணப்பட்டன. இப்பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று, துப்புரவுப் பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச் சூழலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாணவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

துப்புரவு பணியாளர்களுக்கு பயன்படும் வகையில் அவசர உதவி மற்றும் பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் அடங்கிய விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை மாணவர்கள் விநியோகித்தனர். முக்கியமான தொலைபேசி எண்கள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் துப்புரவுப் பணியாளர்களுக்கு நிதிக் கல்வி விழிப்புணர்வு

திட்டப்பணியின் மற்றொரு பகுதியாக, சென்னை என்விரோ சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் எழும்பூர் பகுதியில் துப்புரவுப் பணியாளர்களுக்கான நிதிக் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எழும்பூர் அஞ்சல் நிலைய மக்கள் தொடர்பு அலுவலர் பிரபாகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, துப்புரவுப் பணியாளர்களுக்கு சேமிப்பு, வங்கிச் சேவைகள், நிதித் திட்டமிடல் மற்றும் அரசின் நிதி சார்ந்த திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்வது குறித்து விளக்கப்பட்டது. பணியாளர்கள் தங்களது வருமானத்தில் ஒரு பகுதியை முறையாகச் சேமிப்பதன் அவசியம், வங்கிக் கணக்குகளின் பயன்பாடு, பாதுகாப்பான நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் எதிர்காலத் தேவைகளுக்காக நிதியைத் திட்டமிடுதல் ஆகியவை குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மேலும் வண்ணாரப் பேட்டையில் அமைந்துள்ள சென்னை என்விரோ சொல்யூஷன்ஸ் நிறுவனத்தில் துப்புரவுப் பணியாளர்களுக்கான தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் துப்புரவுப் பணியாளர்கள் தங்களது பணியின் போது எதிர்கொள்ளக் கூடிய தொழில்சார் சுகாதாரப் பாதிப்புகள் மற்றும் பாதுகாப்பு சார்ந்த சவால்கள் குறித்து மாணவர்கள் எடுத்துரைத்தனர். குறிப்பாக, பணியின் போது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை முறையாகப் பயன்படுத்துதல், கைஉறைகள் மற்றும் முகக்கவசங்களை அணிதல், பாதுகாப்புக் காலணிகளைப் பயன்படுத்துதல், கழிவுகளைக் கையாளும் போது பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் பணிக்குப் பிறகு தனிநபர் சுகாதாரத்தைப் பேணுதல் குறித்து விளக்கப்பட்டது.

## அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர் திரைப்படத்தை நீங்கள் அவசியம் பார்க்க 5 காரணங்கள்!



சென்னை 23, செப்டம்பர் 2026: எம்சியூ ரசிகர்களே, மீண்டும் ஒன்று கூடுங்கள்! 2019 ஆம் ஆண்டு வெளியான அவெஞ்சர்ஸ்: எண்ட்கேம் திரைப்படம் உலகளவில் ரசிகர்களை கொண்டாட வைத்தது. அரங்குகள் நிரம்பிய காட்சிகள், நள்ளிரவு சிறப்புக் காட்சிகள், தங்களுக்குப் பிடித்த சூப்பர் ஹீரோக்களைப் போல ரசிகர்கள் வேடமணிந்து வந்தது என, உலகம் முழுவதும் ரசிகர்களை ஒரே பிரம்மாண்டமான கொண்டாட்டத்தில் ஒன்றிணைத்தது. இப்போது, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர் என்ற பெயரில் திரையரங்குகளுக்கு வருகிறது. இதன் மூலம், மார்வெலின் மிகப்பெரிய சினிமா மைல்கற்களில் ஒன்றை மீண்டும் பெரிய திரையில் அனுபவிக்கும் வாய்ப்பு ரசிகர்களுக்குக் கிடைக்கிறது. மேலும், அவெஞ்சர்ஸ்: டூம்ஸ்டே வெளியாகவிருக்கும் நிலையில், அந்தக் கதையின் தொடக்கப் புள்ளியை மீண்டும் பார்ப்பதற்கான முக்கிய காரணங்கள் இதோ:

1. மார்வெலின் மிகப் பெரிய சினிமா நிகழ்வை மீண்டும் ஒருமுறை அனுபவியுங்கள்:

22 திரைப்படங்களின் மூலம் உருவாக்கப்பட்ட ஹீரோக்களையும் கதைக்களங்களையும் அவெஞ்சர்ஸ்: எண்ட்கேம் ஒன்றிணைத்தது. வேறு எந்த திரைப்படத்துடனும் ஒப்பிட முடியாத அளவிலான ஒரு பிரம்மாண்டமான சினிமா நிகழ்வாக அது அமைந்தது. அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர் மூலம் அந்த அனுபவத்தை மீண்டும் பார்ப்பது, அதன் முழு பிரம்மாண்டத்தையும் பெரிய திரையில் அனுபவிக்கும் வாய்ப்பாக அமையும்.

2. கேப்டன் அமெரிக்காவின் பிரபலமான தருணத்தை மீண்டும் பாருங்கள்:

சினிமா வரலாற்றில் இடம்பெறும் சில தருணங்கள் பாப் கலாச்சாரத்தின் ஓர் அங்கமாகிவிடுகின்றன. தானோஸுக்கு எதிரான கேப்டன் அமெரிக்காவின் போராட்டமும், அவெஞ்சர்ஸ் ஒன்றுகூடிய தருணமும் எண்ட்கேன் திரைப்படத்தின் மிகவும் கொண்டாடப்பட்ட காட்சிகளில் ஒன்றாகும். இது ரசிகர்களின் மனதில் நீங்கா நினைவு களை உருவாக்கியது.

3. பிளாக் விடோவுக்கு அஞ்சலி செலுத்துங்கள்:

நடாஷா ரோமானாஃப்பின் தியாகம், திரைப்படத்தின் மிகவும் உணர்ச்சிகரமான தருணங்களில் ஒன்றாக இன்றும் உள்ளது. பல ஆண்டுகளாக அவெஞ்சர்ஸுடன் இணைந்து போராடிய பிளாக் விடோ, அனைவரையும் மீண்டும் உயிர்ப்பிக்க உதவுவதற்காக தனது உயிரையே தியாகம் செய்தார். இது அவரது கதாபாத்திரத்திற்கு வலிமையான மற்றும் மறக்க முடியாத விடைபெறலாக அமைந்தது. அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர் திரைப்படத்தை பார்ப்பது, எம்சியூ-வின் மிகவும் நேசிக்கப்பட்ட ஹீரோக்களில் ஒருவரான பிளாக் விடோவுக்கு ரசிகர்கள் தங்கள் அஞ்சலியை செலுத்தும் ஒரு வாய்ப்பாகும்.

4. புதிய மார்வெல் அத்தியாயத்திற்கு முன் அயர்ன் மேனை இன்னொரு முறை பாருங்கள்:

ரசிகர்களைப் பொறுத்தவரை, அவெஞ்சர்ஸ்: எண்ட்கேம் என்பது ராபர்ட் டவுனி ஜூனியர் நடித்த டோனி ஸ்டார்க்கிற்கு கிடைத்த உணர்ச்சிகரமான விடைபெறலாகும். அயர்ன் மேனாக அவரது இறுதித் தருணங்கள் மார்வெல் வரலாற்றின் முக்கியமான பகுதியாக மாறின. இப்போது ஆர்டிஜே மீண்டும் எம்சியூ-வுக்கு டாக்டர் டூமாக வருவதால், எண்ட்கேம் மீண்டும் பார்ப்பது பழைய நினைவுகளை மீட்டெடுக்கும். அயர்ன் மேனாக அவரது கடைசி தருணங்களை மீண்டும் பார்த்துவிட்டு, முற்றிலும் புதிய அத்தியாயத்துக்குள் அடியெடுத்து வைக்கும் வாய்ப்பு இது.

5. அவெஞ்சர்ஸ்: டூம்ஸ்டேவின் பிரத்யேக முன்னோட்டம்:

மீண்டும் திரையரங்குக்குச் செல்வதற்கான முக்கிய காரணம், அவெஞ்சர்ஸ் எண்ட்கேம்: என்கோர், அவெஞ்சர்ஸ்: டூம்ஸ்டேவுக்கு களமமைத்து, அவெஞ்சர்ஸ் சாகாவின் அடுத்த அத்தியாயத்தைப் பற்றிய பிரத்யேக முன்னோட்டத்தை பார்வையாளர்களுக்கு வழங்குகிறது.

மார்வெல் பிரபஞ்சத்தின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஹீரோக்களை ஒன்றிணைக்க உள்ள நிலையில், இந்த என்கோர் வெறும் பழைய நினைவுகளை மீட்டெடுப்பதாக மட்டும் இல்லாமல், கதை அடுத்து எங்கு செல்கிறது என்பதற்கான எடுத்து சொல்லும்.

## பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் திமுக சார்பில் வழக்கு!!


சென்னை 23, செப்டம்பர் 2026: பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட எதிர்ப்பு தெரிவித்து திமுக சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடலோர ஒழுங்கு முறை மண்டல பகுதியான பட்டினபாக்கத்தில் கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்கு எந்த கட்டுமானமும் மேற்கொள்ளக் கூடாது எனக் குறிப்பிட்டு மயிலை திமுக முன்னாள் எம்எல்ஏ வேலு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பாக தமிழக அரசு பிறப்பித்த அரசாணையை ரத்து செய்யக் கோரி திமுக சார்பில் முன்னாள் எம்எல்ஏ வேலு சார்பில் மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. அந்த மனுவில்; போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியில் தலைமைச் செயலகம் அமைத்தால் பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் பாதிக்கப்படுவர். பொதுமக்களுக்கும் அந்த பகுதி மீனவ மக்களுக்கும் கடுமை யான பாதிப்பு ஏற்படும். கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதியில் கடற்கரையில் இருந்து 500 மீட்டர் தூரத்திற்கு எந்த கட்டுமானமும் மேற்கொள்ளக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுச்சூழல் மற்றும் கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் உள்ளிட்ட துறைகளின் ஒப்புதல் விவரம் அரசாணையில் இல்லை. பட்டினப்பாக்கத்தை தேர்வு செய்ததற்கான காரணம் எதுவும் அரசாணையில் குறிப்பிடப்படவில்லை. நிதி நெருக்கடியில் உள்ளதாக அறிவித்த அரசு ரூ.1200 கோடியில் புதிய தலைமை செயலகம் அரசாணை பிறப்பித்தது தன்னிச்சையானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட எதிர்ப்பு தெரிவித்து, திமுக முன்னாள் எம்எல்ஏ வேலு சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.

## அக்.20 முதல் அமல் நியூசிலாந்தில் இந்தியப் பொருட்களுக்கு முழு வரி விலக்கு: ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் தகவல்



சென்னை 23, செப்டம்பர் 2026: இந்தியா மற்றும் நியூசிலாந்து நாடுகளுக்கு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வரும் அக்டோபர் 20-ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நேற்று அறிவித்துள்ளார். இரு நாடுகளுக்கு இடையே பொருட்கள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தை ஊக்குவிக்கவும், முதலீடுகளை அதிகரிக்கவும் இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் 27-ஆம் தேதி கையெழுத்தானது. இது குறித்து ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவிக்கையில், ‘‘வரும் அக்டோபர் 20-ஆம் தேதி விஜயதசமி, சரஸ்வதி பூஜை திருநாளில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகிறது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், நியூசிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியாவின் எல்லா பொருட்களுக்கும் 100 சதவீத வரிகளின்றி அனுமதி கிடைக்கும். தற்போது செராமிக்ஸ், கம்பளங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் உள்ளிட்ட முக்கிய இந்தியப் பொருட்களுக்கு நியூசிலாந்து 10 சதவீதம் வரை அதிகபட்ச சுங்க வரி விதித்து வருகிறது. இனி இந்த வரிகள் முற்றிலும் நீக்கப்படும். மேலும், இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் 20 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்ய நியூசிலாந்து உறுதிபூண்டுள்ளது.” என்று தெரிவித்தார்.

## நடிகர் கருணாஸ் நடிப்பில் வெளியான, 'என்ன விலை' திரைப்படத்திற்கு ரசிகர்கள் மற்றும் ஊடகங்களிடமிருந்து அமோக வரவேற்பு கிடைத்து வருகிறது!



சென்னை 23, செப்டம்பர் 2026: சமீபத்தில் வெளியான 'என்ன விலை' திரைப் படம், அதன் விறுப் பான கதைக்களம், நடிகர்களின் சிறப்பான நடிப்பு ஆகியவற்றிற் காக ரசிகர்களிடமிருந்து அமோக வரவேற்பு பெற்று வருகிறது. திரையரங்குகளில் ரசிகர்கள் கொடுத்து வரும் இந்த வரவேற்பு படக்குழுவினரையும் உற்சாகப்படுத்தி யுள்ளது.

ஊடகங்கள் மத்தி யிலும் இப்படத்திற்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன. இயக்கு நரின் அணுகுமுறை, நடிகர்களின் நடிப்பு மற்றும் வலுவான உள்ளடக்கத்தை மையமாகக் கொண்ட கதை சொல்லல் ஆகிய வற்றுக்கு நேர்மறை யான விமர்சனங்கள் கிடைத்து வருகின்றன. ரசிகர்களிடையே உருவாகியுள்ள நேர் மறையான 'வேர்ட் ஆஃப் மவுத்' வரவேற்பும் படத்தின் மீதான ஆர்வத்தை மேலும் அதிகரித்து வருகிறது.

இதனை உறுதிப் படுத்தும் விதமாக, பல்வேறு பகுதிகளில் இப்படத்தின் திரை யரங்குகளின் எண்ணிக் கை அதிகரிக்கப்பட் டுள்ளது. ஜிதேஷ் விஸ்வாம்பரன் மற்றும் அனுகோபால் வேணு கோபால் தயாரித்துள்ள 'என்ன விலை' திரைப் படம், அதன் வலுவான உள்ளடக்கம் மற்றும் கதை சொல்லல் மூலம் ரசிகர்களை கவர்ந் துள்ளது.

இயக்குநர் சஜீவ் பழூர் பகிர்ந்து கொண்டதாவது, "விருதுகள் மட்டுமே திரைப்பட இயக்குநர் களை இன்னும் சிறந்த படங்களை உருவாக்கு வதற்கு ஊக்கப்படுத்துவ தில்லை. ரசிகர்களிட மிருந்து கிடைக்கும் அங்கீகாரமும் அதே அளவு முக்கியமானது. தமிழ் சினிமா ரசிகர்கள் நல்ல கதைகளுக்கு எப்போதும் ஆதரவு கொடுப்பார்கள். அந்த வகையில், 'என்ன விலை' திரைப்படத் திற்கு கிடைத்து வரும் இந்த அமோக வரவேற்பு எங்களுக்கு உற்சாகமும் நம்பிக்கை யும் கொடுத்திருக்கிறது. பல பகுதிகளில் 'என்ன விலை' திரைப்படத் திற்கு திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது இந்தப் படத்திற்கு ரசிகர்கள் கொடுத்த அங்கீகாரமாகவே பார்க்கிறோம்.

'என்ன விலை' படத்திற்கு ஆதரவளித்த ஒவ்வொரு ரசிகருக்கும், தங்களது பாராட்டு களைத் தெரிவித்த ஊடகங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரும் நாட்களில் இப்படம் இன்னும் சிறப்பான வெற்றியைப் பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. நல்ல கதைகளை தேர்ந்தெடுக்கும் நடிகர் களுக்கும் இயக்குநர் களுக்கும் தயாரிப் பாளர்களும் இது உற்சாகமும் ஊக்கமும் தரும்" என்றார்.

## 100 கோடி வசூல் நாயகர்கள் இணைந்த இயக்குநர் ராமின் 'ஏழு கடல் ஏழுமலை' : அக்-1 உலகெங்கும் ரிலீஸ் !





சென்னை 23, செப்டம்பர் 2026: வி ஹவுஸ் புரொடக்ஷன்ஸ் சார்பில் சுரேஷ் காமாட்சி தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'ஏழு கடல் ஏழுமலை'.

உணர்வுப்பூர்வமான படங்களைக் கொடுத்து வரும் இயக்குநர் ராம் இப்படத்தை இயக்கி யுள்ளார்.

நிவின்பாலி, சூரி, அஞ்சலி நடித்துள்ளனர். மேலும் ஒரு எலி முக்கிய பாத்திரமாக வருகிறது.

இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

மலையாளத்தில் முன்னணி கதாநாயக னாக வலம் வரும் நடிகர் நிவின்பாலி மற்றும் தற்போது தமிழில் முன்னணி கதாநாயகன் வரிசைக்கு உயர்ந்துள்ள நடிகர் சூரி இருவரும் இணைந்து நடித்துள்ள படம் என்ப தால் இந்த படத்தின் ரிலீஸ் குறித்து நாளுக்கு நாள் எதிர்பார்ப்பு அதிகரித்துக் கொண்டே வந்தது.

அதிலும் கடந்த வருடம் மலையாளத் தில் நிவின்பாலி நடித்த 'சர்வம் மாயா' திரைப் படம் 100 கோடியும் இந்த வருடம் ஓணம் பண்டிகைக்கு வெளி யான அவரது 'பெத்லகேம் குடும்ப யூனிட்' திரைப்படம் 300 கோடியும் வசூலித்து நிவின்பாலியை ஒரு அசைக்க முடியாத நட்சத்திரமாக மாற்றி உள்ளது. தமிழ் ரசிகர் களிடம் அவருக்கு கிடைத்துள்ள வரவேற் பும் இந்த வசூலுக்கு முக்கிய காரணம்.

அதேபோல இன்னொரு பக்கம் சமீபத்தில் வெளியான 'மண்டாடி' படத்தின் மிகப்பெரிய வெற்றி மூலம் நடிகர் சூரியும் 100 கோடி வசூல் நாயகனாக உயர்ந்துள்ள நிலையில் இந்த இருவர் நடித்துள்ள 'ஏழு கடல் ஏழு மலை' வரும் அக்டோபர் 1ஆம் தேதி ரசிகர்களை மகிழ்விக்க உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.

மகுடத்தில் மேலும் ஒரு மாணிக்கம் பதித்தது போல நடிகர் துல்கர் சல்மானின் தயாரிப்பு மற்றும் விநியோக நிறுவனமான வேஃபாரர் ஃபிலிம்ஸ் 'ஏழு கடல் ஏழு மலை' படத்தை கேரளாவில் வெளியிடும் உரிமை யை கைப்பற்றியுள்ளது.

கடந்த வருடம் துல்கர் சல்மான் தயாரித்து வெளியிட்ட 'லோகா சாப்டர் 1', 'சந்திரா' திரைப்படம் 300 கோடி வசூலித்து சாதனை படைத்த நிலையில் அவரது வெற்றிக் கரங்களால் 'ஏழு கடல் ஏழு மலை' படம் கேரளாவில் திரையிடப்படுவது இன்னும் எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

அந்தவகையில் ஒரு ரசிகர்கள் கொண் டாடும் ஒரு உற்சாகத் திருவிழாவாக வரும் அக்டோபர் 1ஆம் தேதி ரசிகர்கள் கொண்டாட் டத்திற்கு ஏற்ப கேரளா உட்பட உலகமெங்கும் வெளியாகிறது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## 'விட்ரா மச்சா...' எதிர்பாராத திருப்பங்களுடன் துள்ளல் இசையில் உருவான வித்தியாசமான காதல் தோல்வி பாடல்!



சென்னை 23, செப்டம்பர் 2026: தமிழில் இசை சார்ந்த கதையாடலுக்கான புதிய களமாக சுயாதீன இசை தொடர்ந்து வளர்ந்து வருகிறது. திரைப்படப் பாடல் களுக்கு கிடைக்கும் வரவேற்புக்கு நிகராக, சுயாதீன பாடல்களை யும் ரசிகர்கள் ஆர்வத் துடன் ரசித்து வருகின் றனர். அந்த வகையில் காதல், காதல் தோல்வி, நகைச்சுவை மற்றும் அதிரடியான குத்து இசை ஆகியவற்றை வித்தியாசமான முறை யில் இணைக்கும் புதிய பாடல் ஒன்று வெளி யாகியுள்ளது

ஆஷிக் மற்றும் ஷ்ரவ்னிதா ஸ்ரீகாந்த் நடிப்பில் உருவாகி யுள்ள இந்தப் பாட லுக்கு, ரூபேஷ் திவாரி இசையமைப்பாளர், பாடலாசிரியர் மற்றும் பாடகராகவும் பணி யாற்றியுள்ளார். ஆட்டம் போட வைக்கும் துள்ளலான இசையும், நகைச்சுவை கலந்த இசை அணுகு முறையும் கொண்ட இந்தப் பாடல், வழக்க மான காதல் தோல்விப் பாடல்களில் இருந்து வேறுபட்ட ஒன்றாக உள்ளது.

ஒரு இளம் காதல் ஜோடிக்கு இடையே யான தொலைபேசி உரையாடலுடன் பாடல் தொடங்கு கிறது. அப்போது அந்தப் பெண் 'பிரேக்' என்ற ஒரு வார்த்தை சொல்கிறார். அவர் தனது வார்த்தையை முழுமையாகச் சொல்லும் முன்பே தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்படுகிறது. ஆனால், கதாநாயக னோ உடனடியாக ஒரு முடிவுக்கு வந்து, அவர் 'பிரேக் அப்' என்று கூறியதாக நினைத்துக் கொள்கிறார். இதை யடுத்து, தனது காதல் தோல்வியடைந்து விட்டதாக எண்ணி அவர் சோகத்தில் மூழ்க, இதனால் உருவாகும் குழப்பமும் நகைச்சுவை யுமே பாடலின் கரு.

இதற்கிடையே, கதாநாயகனின் நண்பர் இந்தப் பிரிவை நல்ல விஷயமாகப் பார்க் கிறார். காதல் உறவி லிருந்து கிடைத்த புதிய சுதந்திரத்தை கொண் டாடும் அவர், கதா நாயகனின் சோகத்துக்கு முற்றிலும் மாறாக உற்சாகமாக இருக் கிறார். அங்கிருந்து பாடல் அதிரடியான குத்து இசைத் தாளங் களுடன் வேகமெடுக் கிறது. சோகத்தை வெளிப்படுத்தும் வரிக ளுடன், வித்தியாசமான மற்றும் நகைச்சுவை கலந்த ஃப்ளாஷ்பேக் காட்சிகளும் இணை கின்றன. கதாநாயகனின் சோகமான மனநிலைக் கும், பாடலின் உற்சாக மான இசைத் தாளங் களுக்கும் இடையே யான முரண்பாடே இந்தப் பாடலின் தனித்துவம்.

கேட்டவுடன் பிடிக்கும் மியூசிக்கல் எனர்ஜி, வித்தியாசமான கதைக்களம் மற்றும் வழக்கமான காதல் தோல்விப் பாடல் பாணியை நகைச்சுவை யுடன் அணுகும் விதம் என, இந்த சுயாதீன பாடல் தமிழின் வேகமாக வளர்ந்து வரும் சுயாதீன இசை கலாச்சாரத்தில் மேலும் ஒரு வண்ணமயமான படைப்பு. ஏற்கனவே தெலுங்கு இசைச் சந்தையில் பிரபலமான கே மியூசிக் தமிழ் இசை லேபிள் சார்பில் இந்தப் பாடல் வெளியாகி யுள்ளது.

## தொழிற்சாலைக்கு வெளியே ஸ்ரீபெரும்புதூரில் சிறு வணிகர்களின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் சாம்சங்



சென்னை 23, செப்டம்பர் 2026: ஸ்ரீபெரும்புதூர் ஒரு பெரிய தொழில் மைய மாக வளர்ந்து வருவ தோடு, தொழிற்சாலை களைத் தாண்டியும் பல புதிய வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது. இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் குடியிருப்புகள் அதிக ரித்துள்ளதால், அன் றாடப் பொருட்கள் மற்றும் சேவைகளுக் கான தேவையும் அதிக ரித்துள்ளது. இதனால் உள்ளூர் சிறு வணிகர் கள் பெரும் பயன டைந்து வருகின்றனர்.

டீக்கடைகள், மளிகை மற்றும் ஹார்டு வேர் கடைகள் முதல் குடிநீர் விநியோகிப் பவர்கள், மெக்கானிக்கு கள் மற்றும் உள்ளூர் வாகன ஓட்டிகள் வரை அனைவரும், தங்கள் வியாபாரமும் வளர்ந் துள்ளதாகக் கூறுகின் றனர். சாம்சங் சென்னை ஆலை உள்ளிட்ட பெரிய நிறுவனங்கள் இங்கு வந்ததால், அதிக வேலைவாய்ப்புகள், மக்கள் நடமாட்டம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட் டுள்ளது.

சாம்சங் நிறுவனம் கடந்த 2007-ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூ ரில் தனது சென்னை தொழிற்சாலையை அமைத்தது. அதன் பிறகு, இந்தப் பகுதியில் நிறைய தொழிற்சாலை கள், வீடுகள் மற்றும் இதர சேவைகள் பெருகி யுள்ளன. இதனால், தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்களின் அன்றாடத் தேவை களைப் பூர்த்தி செய்யும் சிறு கடைகளுக்கு வாடிக்கையாளர்கள் பெருமளவு அதிகரித் துள்ளனர். நீண்டகால மாக இங்கு தொழில் செய்து வரும் உள்ளூர் வியாபாரிகளுக்கு, இந்த மாற்றம் அவர்களின் வியாபார வளர்ச்சியி லேயே தெளிவாகத் தெரிகிறது.

ஸ்ரீபெரும்புதூரில் சுமார் 30 ஆண்டுகளாக டீக்கடை நடத்தி வரும் ராஜன், பழைய ஸ்ரீ பெரும்புதூரை நினைவு கூருகிறார். "நான் கடை யை ஆரம்பித்தபோது, வாடிக்கையாளர்கள் மிகக் குறைவு. சுற்றி யுள்ள பகுதியும் பெரிய அளவில் வளர்ச்சி அடையாமல் இருந்தது. ஆனால் இன்று, சிறு வீடுகள் இருந்த இடங் களில் பெரிய அடுக்கு மாடிக் குடியிருப்புகள் வந்துவிட்டன. நிறைய கம்பெனிகளும் ஏஜென் சிகளும் உருவாகி விட்டன. அதிக அளவி லான மக்கள் இங்கு வசிப்பதோடு வேலை யும் செய்கிறார்கள்," என்று ராஜன் கூறினார்.

இந்த ஊரின் வளர்ச்சிக்கு ஏற்ப அவரது கடையும் வளர்ந்துள்ளது. தொடர்ந்து வரும் வாடிக்கையாளர்களின் கூட்டமே, அவரைச் சுற்றி நடக்கும் இந்தப் பெரிய மாற்றத்திற்குச் சாட்சியாக உள்ளது.

வளரும் உள்ளூர் பொருளாதாரம்

அன்றாட வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வியாபாரங் களிலும் இதே வளர்ச் சியைக் காண முடி கிறது. எலக்ட்ரிக்கல் மற்றும் ஹார்டுவேர் கடை நடத்தி வரும் சதீஷ் குமார் கூறுகை யில், இப்பகுதியில் அதிக குடும்பங்களும் தொழிலாளர்களும் குடியேறியதால் பொருட்களுக்கான தேவை அதிகரித் துள்ளது என்கிறார்.